R 5/8/2001

உ
சிவமயம்



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட

**அமரர் . பத்மலோஜினி நாகேந்திரன்**

அவர்களின்

மறைவு குறித்த

# நினைவு மலர்

**03-08-2001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திருமதி பத்மலோஜினி நாகேந்திரன்

அவர்கள்



தோற்றம்
31
●
09
●
1955

மறைவு
04
●
07
●
2001

**திதி:- வளர்பிறை சதுர்த்தசி**

அன்பெனும் விதையை
எங்களுக்குள் தூவி விட்டு
ஆலமரம் சாய்ந்து போனதேன் ?
மீளாத் துயரில் – நாம்
மூழ்கிப் போனோம் !
மீண்டும் உனை – இனி
எப்போது காண்போம் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாய் மகமாரி

## எடுப்பு

விழியால் ஒருதரம் பார்த்தால் எந்தன்
வேதனை அகன்றிடும் மகமாரி அம்மா.

## தொடுப்பு

எழிலே உருவாய் சுன்னை கிழக்கினில்
என்றுமே அருள் மழை சொரிந்திடும் நீ தாயே.

## முடிப்பு

பூச்சூடி உனைத் தொழும் பூவையர் என்றுமே
புதுவாழ்வு பெற்றுமே பூரிப்பில் நிற்கின்றார்.
பேச்செல்லாம் உன்புகழ் பெருக்குகின்ற அடியார்க்கு
பேரருள் தருகின்ற தாயே மகாமாரி.

சந்தனக் காப்பில் உன்னெழில் கண்டுமே
வந்தனம் செய்திடும் அடியவர் என்றுமே
சுந்தர வாழ்வினில் தூயராய் நின்றிட
தந்தருள் புரிகின்ற தாயே மகாமாரி.

– கவிஞர் துரை –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரத்திரட்டு

## தேவாரம்

பேராயி நம்பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார் கென்றும்
வாராத செல்வம் வரிவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருத்துமாகித்
தீராநோய் தீத்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெனத் திண்சிலை கைக்கொண்ட
பேரானைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கினேனே.

## திருவாசகம்

தந்தது உன்தனை கொண்டது என்தனை
சங்கரா ஆர் கொலோ சதுர
அந்த மொன்றிலா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது என்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப் பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் உனக்கு இன்னோர் கைமாறே..

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியை
கரையிலார் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர்
மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண்டுள்ளம் குளிர
வென் கண் குளிர்ந்தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்.
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசந் காட்
செய்மின் குழாம் புகுந்
தண்டங்கடந்த பொருளைவில்ல தோரானந்த
வெள்ளப் பொருள்
பண்டு மீண்டு மென்றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

மண்றின் மணிவிளக்காய் மருவுமுக நகை போற்றி
ஒன்றிய மங்கலணானை ஒளி போற்றி – உலகு அன்பர்
சென்று தொழ அருள் சுரக்கும் சிவகாம சுந்தரி
நின்றறிவை போற்றி
நிலவு திருவடி போற்றி

## அபிராமி அந்தாதி

ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்
தாளைப் புவியடிங்கக்
காத்தாளை அங்குச பாசாங்
குசமுங் கரும்புமங்கை
சேத்தாளை முக்கன்னியைத் தொழு
வார் கொரு தீங்கில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகி
பிறவாகி திறமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## கந்தரலங்காரம்

கதிதனை ஒன்றையும் காண்கிலேன் கந்தவேள்
முருகா
நதிதனை யன்ன பொய்வாழ்வில் அன்பாம் நரம்பாற்
பொதிந்த
பொதிதனையுங் கொண்டு திண்டாடுமாறு என்னை
போகவிட்ட
விதிதனை நொந்து நொந்து இங்கே என்மனம்
போகின்றதே.

## பட்டினத்தார்

என் செயலா லாவது ஒன்றுமில்லை இனித்
தெய்வமே
உன்செயலே என்று உணரப் பெற்றேன்.
இந்த ஊண் எடுத்த பின் செய்த தீவினை
யாதொன்றுமில்லை
பிறப்பதற்கு முன் செய்த தீவினையே இவ்விதம்
வந்து மூண்டதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தென வருணிக்கப்படும் இலங்கைத் திருநாட்டின் மணிமுடியாய் விளங்கும் யாழ்ப்பாண நன்னகரில் பல்துறை வளமும் செறிந்து விளங்கும் சுன்னாகம் கிழக்கு பதியினிலே ஆன்மீக உணர்வு கொண்ட செல்லத்துரை பவளராணி தம்பதிகளின் மூத்த புதல்வியாக உதித்தவரே அமரர் பத்மலோஜினி ஆவார்.

1955ம் ஆண்டு 9ம் மாதம் 31ம் திகதி இவர் பூமியில் வந்துதித்த நன்னாளாகும் பத்மராணி, பகீரதன், சிறீதரன், பத்மரஜனி என்பவர்களை உடன் பிறப்புகளாகப் பெற்ற குடும்பத்தின் குலவிளக்காக விளங்கியவரே இவராவார். தாய் தந்தை சகோதரகளை பாசமுடன் பராமரித்ததுடன் குடும்ப நலனிற்காக அரும்பாடுபட்டார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை திருஞான சம்பந்த வித்தியாசாலையிலும் பின் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாசாலையத்திலும் தமது கல்வியை கற்றுத் தேறினார். உரிய வயதில் 1979ம் ஆண்டு வே.நல்லதம்பி (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகஸ்த்தர்) சின்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனாகிய திரு.நாகேந்திரன் (மின்சாரசபை சுன்னாகம்) அவர்களை விவாகம் செய்தார். இவர்களுக்கு பிரபாலினி, உதயாழினி, சயந்தினி. சுதர்சன் ஆகிய நான்கு செல்வங்களைப் பெற்றெடுத்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது கணவனின் வேலைமாற்றம் காரணமாக 1983ம் ஆண்டு மன்னாரில் சென்று வசித்து வந்தார் 16 வருடங்களின் பின் தமது தாய் மண்ணிற்கே திரும்பி வந்தார். இவர் தமது கணவன் பிள்ளைகளின் நலனில் மட்டுமன்றி தமது புகுந்த வீட்டினரின் நலனை நோக்கிற் கொண்டு அவற்றை நிறைவேற்றியும் அவர்களின் உள்ளங்களில் நீங்காத இடம் பெற்றும் வாழ்ந்து வந்தார்.

பாசமே உருவாகிய அமைதியான குடும்பத்தின் குல விளக்காய் ஒளி பரப்பிக் கொண்டிருந்த பத்மலோஜினி அவர்கள் குடும்ப பொறுப்புக்களையும் கணவனுக்கு செய்யும் பணிவிடைகளையும் கடைசி வரையும் செய்வதற்கு காலன் விட்டானில்லை. நோயென்ற போர்வையில் வந்த காலன் துன்பப்படுத்தினான்.தன்னுடன் அழைத்துக் கொண்டான். நாங்களெல்லாம் ஏமாந்துவிட்டோம். இப்படியா வாழ்வு இதுதானா வாழ்வின் நியதி என்று கேட்குமளவிற்கு வீணையின் தந்திகள் அறுந்து விட்டன.

இனி ஓசை எழுமா?
நாதம் கேட்குமா? ஒரே அமைதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுவின் உபதேசம்

உருத்திர பூமியிலே காராம்புவி நாட்டிலே விசாகசாலையன் என்ற அரசன் அறந்தவறாது செங்கோலாற்றி வந்தான். அந்த நாட்டிலே கங்கைபாயும் கரையில் ஒரு கிராமத்தில் ஐந்நூறு மாடுகள் அடங்கிய பட்டியை குடிதாக்கினான் என்பவன் காப்பாற்றி வருகிறான்.

நாட்டின் யாதகத்தில் மீனத்தில் சனிபகவான் புகுந்தால் மூன்றரை வருடங்களாக மழை பெய்யாது விட்டது. இடையன் துன்பப்பட்டான் பசுக்கள் வாடின. ஏதோ யோசனையில் பசுக்களுக்கு இரைதேடவும் காட்டுக்குள் புகுந்தான் அங்கு ஓரிடத்தில் தண்ணீரையும் மேச்சல் நிலத்தையும் கண்டான். பசுக்களை அவ்விடத்திற்கு சாய்த்துச் சென்று மேச்சல் காட்டி நீர்காட்டி சந்தோசப்பட்டிருக்கும் வேளையில் ஒருநாள் கூட்டத்தினுள் கபிலைப்பசு பசி தாங்கமுடியாமல் மற்றைய பசுக்கள் எல்லாவற்றையும் இடித்து கலைத்து விட்டு நல்ல புற்றரையில் மேய்ந்தது.

வயிறு நிறைய மேந்ததால் கபிலைப்பசு நீர் குடிக்கச் சென்றது.மணிச்சத்தமும் பசுவாடையும் வந்த திசையை நோக்கி பசியால் தவித்திருந்த புலியொன்று நீர் நிலைக்கு வந்தது. உறுமிக் கொண்டு "நான் எட்டு நாளாய் பசியால் வாடுகிறேன் நல்ல தருணத்தில் வந்துள்ளாய்" என்று புலி சொல்லியது அவ்வேளை கபிலைப்பசு நான் சாவதற்குப் பயப்படவில்லை நிலத்தில் முளைத்த புல் கூட ஒருநாள் மடியத்தானே வேண்டும். எனக்கொடு தர்மசங்கடம். நீண்ட நாட்களாக மலடி என்ற பெயர் கேட்ட நான் நேராத தெய்வமில்லை. கும்பீடாத கோயிலில்லை.இந்த வேளையில் கன்றொன்றை ஈன்றுள்ளேன் அதற்கு புல் மேயத்தெரியாது நான் பால் கொடுதது விட்டு பின் வருகிறேன் என்றது கயிலைப்பசு. எப்படி உன்னை நம்புவது என்று புலி கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை ஆற்றங்கரையில் காராம்பசுவைக் கொன்றவன் போன்று எழுபது பாவங்களை செய்தவர்களைப் போன்று நரகத்துக்குப் போவேன்.எனவே நான் திரும்பி வருவேன் என்று கயிலை சொல்லியது சந்தோசப்பட்ட புலி பிள்ளைக்கு பால் கொடுத்து விட்டு திரும்பி வந்துவிடு என்று சொல்லி அனுப்பியது.

கபிலைப்பசு செல்லும் வழியிலே பசியால் வாடிய மலைப் பாம்பொன்று மரம்போல வரவை எதிர்பாத்திருந்தது.மரத்துடன் மரமாய் இருந்த மலைப்பாம்பில் கபிலைப்பசு சொறி தேய்த்தது. பாம்பு இரை கிடைத்ததென்று சுற்றிவளைக்க "அரகர சிவனே" என்று கத்தியது.பாம்பு ஏன் இப்படி துன்பப்பட்டு இறைவனைக் கூப்பிடுகின்றாய் என்று கேட்ட பசு புலியில் அகப்பட்ட வரலாறுகளைச் சொல்லி பாம்பினுடைய சரித்திரங்களையும்சொல்லியது. இரங்கிய பாம்பு கயிலைப்பசுவை விடுதலை செய்தது.

கபிலைப்பசு தன் கன்றிடம் ஓடிச் சென்றது. தாயின்சோகத்தையும் உடலெல்லாம் இரத்தம் சிந்தியிருப்பதையும் கண்ட கன்று என்ன நடந்தது என்றுகேட்க முதலில் இரைதேடிய பொழுது முள் கிளித்ததென்று சொல்லி பின் சுதாகரித்துக் கொண்டு புலியிடமும், பாம்பிடமும், அகப்பட்ட சம்பவங்களைச் சொல்லியது. நான் கொடுத்த வாக்கின்படி புலியிடம் செல்ல வேண்டும் என்று கபிலைப் பிள்ளையிடம் கூறியது அம்மா உன்னைக் கொல்லும்புலிபின்புஎன்னையும் கொல்லும் தானே நானும் உன்னுடன் வருகிறேன் என்று பசுக்கன்று சொல்லிய போது,சஞ்சலப்படாதே கன்று நீ மனதைதிடப்படுத்திக்கொள். என்னைத் துஸ்டமிருகம் என்ற சொல்லுக்கு ஆளாக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எங்கள் இனத்தவர்களோடு சேர்ந்து பெரியவர்களுடன் சண்டையிடாதே போன்ற பதினாறு அறிவுரைகளைச் சொல்லி தன் இனத்தவர்களிடம்கன்றை ஒப்படைத்து விட்டுச் சென்றது.

சொன்ன சொல்தவறாதுகயிலைப்பசு புலி அரசனிடம் சென்றது. பசுவைக் கண்டது பசி தீர்ந்தது என்று புலி கொல்ல மறுத்தது. அதுமட்டுமல்ல தன்னை சீடனாக ஏற்கும்படி பசுவிடம் கேட்டுக்கொண்டது. கபிலைப்பசு மிருகேந்திரனாகிய புலிக்கு பூமியில் மானிடர்கள் செய்ய வேண்டிய புண்ணிய கருமங்களையும் தான தர்மங்களையும் நன்றாக எடுத்துக் கூறியது. இதே போன்று பாவம் செய்தவர்கள் நரக உலகத்தில் படும் அவஸ்தைகளையும் துன்பங்களையும் வெகு சிறப்பாக கயிலை எடுத்துக்கூறியது.

இந்த வாக்குவாதத்தை பார்வதியும் பரமசிவனும் வாரணத்திலிருந்து நோக்கி கீழிறங்கி இருவருக்கும் முக்தி கொடுத்து கைலாயத்திற்குக் கொண்டு சென்றார்கள். இக் கதையை விருப்பத்துடனே படித்தவர்களும் கேட்டவர்களும் இம்மையில் பதினாறும் பெற்றுச் சுகத்துடனே வாழ்ந்து மறுமையிலே கைலாயத்தில் பரமேஸ்வரன் அருகே வீற்றிருப்பார்கள் இக்கதையைக் கேட்டாலும் படித்தாலும் இது எழுதிய புத்தகத்தை வீட்டில் வைத்திருந்தாலும் மாடு,ஆடு பெருகிப் பாலும் பண்ணையும் உண்டாகிப் பசுக்களுக்கு நோய் முதலியன வராமல் தழைத்து ஓங்கும். எனப் பரமேஸ்வரன் ஈஸ்வரிக்கு கூறியருளினார்.

**கதை முற்றிற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மரம் சரிந்தது

"தற்காத்தாற் கொண்டாற் பேணிதகை
சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற வள்ளுவர் பொய்யாமொழிக்கேற்ப வாழ்ந்து காட்டியவர்அமரர் திருமதி பத்மலோஜினி நாகேந்திரன் அவர்கள். அமைதி, அடக்கம், நற்பண்பு, பக்தி, ஆசாரம் நிறைந்து முக்கனிகள் போன்ற மூன்று புதல்விகளையும் அந்தக் கனிக்குள் வித்தென விளங்குவது போல அருமை திருக்குமாரனையும் பெற்று ஒரு ஆலமரம் போல நிழல் தரும் விருட்சமாக திகழ்ந்து. அந்த மரத்திற்கே தெரியாது போல நோய் ஏற்பட்டு அழிந்து விட்டது என்றால் படைத்தவன் திரும்ப அழைத்துவிட்டான், ஏனெனில் திரும்பவும் ஒரு விருட்சமாக திகழவேண்டும் என்ற நோக்கில் என்றே கூட கூறலாம். ஆன்மாவானது ஒரு போதும்அழியாது.இறைவனால் தனக்கு இட்ட கட்டளையினை பூர்த்தி செய்ததும் திரும்பவும் இறைவனே ஆட்கொள்ளுவான். இந்த வகையினில் மண்ணில் பிறந்தவர் இறப்பது திண்ணம். ஆனால் ஊன் என்ற உடம்புதான் அழியுமே அன்றி உயிராகிய ஆன்மா அழியாது வேறு சரீரம் எடுப்பது திண்ணம். அமரர் பத்மலோஜினி கடவுள் பக்திக்கு கட்டுப்பட்டவர் என்னேரமும் சதா முருகன்,அம்பாளை,நினைத்த வண்ணமே உள்ளவர். சுன்னாகம் கிழக்கு மகாமாரி அம்பிகையில் பூரண பக்தி உடையவர் என்றே கூறலாம்.அப்படிப்பட்ட அம்மையார் அம்பாளின் கும்பாவிஷே தினத்தன்று தகனம் செய்தது என்றால் என்றும் அவருக்கு மாகாமாரி அம்பாளின் அருள் உண்டு என்றே கூறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரின் திடீர் மறைவு எல்லோரையும் மீளாத்துயரில் ஆளாக்கி விட்டது. திடீர் துயரினால் ஆளாகியுள்ள அவர்தம் கணவருக்கும் மழலை செல்வங்களுக்கும் ஆறுதலும் ஆசியும் கூறுவதோடு அவர் ஆத்மா சாந்தியடைந்து சாயுட்சிய வாழ்வு பெற எல்லாம் வல்ல சர்வலோக நாயகி அன்னை ஸ்ரீ மாரியம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்
ச.ஸ்ரீ சண்முகானந்த குருக்கள்
ஸ்ரீ மாரியம்பாள் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தெய்வம் நோய் வாய்ப்பட்டிருந்த வேளையில் யாழ், மகரகம வைத்தியசாலைகளில் அவருக்கு வேண்டிய வைத்திய உதவிகளையும் மற்றும் சகல தொண்டுகளையும் அர்ப்பணிப்புடன் செய்த வைத்திய நிபுணர்களுக்கும், ஊழியர்களுக்கும்,

அவர் இறைபதம் அடைந்தபின் அவரின் பூதவுடலை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து தங்கள் அனுதாபங்களையும், மலர்ச்செண்டுகளையும், அஞ்சலித்துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்து எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்,விசேடமாக மின்சாரசபை தலைமை அதிகாரிக்கும், சுன்னாகம் மின்சாரசபை அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், மற்றும்

இன்றைய சபிண்டீகரனக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்..

*இங்ஙனம்*

**கணவர்: நாகேந்திரன்**

**பிள்ளைகள்: பிரபாலினி, உதயாளினி, சயந்தினி, சுதர்சன்.**

சுன்னாகம் கிழக்கு,
03 – 08 – 2001..

PRINTED BY SRI RAAM OFFSET PRINTERS ,250,PALALY R.D,JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org